தரிசனம் கிடைக்காதா?

- உள்ளூர் பக்தர்கள் கோயிலுக்கு செல்வதில் சிரமம்
- கடும் அதிருப்தியில் திருவண்ணாமலை மக்கள்

■ திருவண்ணாமலை, ஆக.2-

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் பிரசித்தி பெற்றது. இங்கு வந்து அருணாசலேசுவரரை தரிசனம் செய்ய நாள்தோறும் தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா மற்றும் வெளிநாடுகளிலும் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலின் எழில்மிகு தோற்றம்

குறிப்பாக பவுர்ணமி நாட்களில் நகரில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். கோயிலில் நுழைவு பகுதிகளாக ராஜகோபுரம், அம்மணி அம்மன் கோபுரம், பே கோபுரம் மற்றும் திருமஞ்சன கோபுரம் என்று நான்கு திசைகளிலும் வழிகள் இருந்தது. கூட்ட நெரிசலை முறைப்படுத்த ராஜகோபுரம், அம்மணி அம்மன் கோபுரம் ஆகிய இருவழிகளில் மட்டுமே பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

கோயில் முழுக்க கூண்டுகள் அமைத்து க்யூ வரிசை முறை அமல்படுத்தப்பட்டது. இந்த வழியாக மட்டுமே பக்தர்கள் கோயிலுக்குள் செல்ல முடியும். கூட்டம் அதிகமாக உள்ள நேரங்களில் தரிசன காத்திருப்பு நேரம் 8 மணி நேரம் கூட ஆகலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. வெளிமாநில, மாவட்ட பக்தர்கள் வரத்து அதிகரித்ததால் உள்ளூர் மக்கள் சுவாமியை தரிப்பது எட்டாக்கனியாக மாறி விட்டது.

உள்ளூர் மக்களுக்கு தரிசன திட்டம்

பல ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலை நகரில் உள்ள மக்கள் நேரம் கிடைக்கும் போது எல்லாம் எளிதாக அருணாசலேசுவரரை தரிசித்து வந்தனர். கோயில் வளாகம் ஆன்மிகத்துக்கும், மக்களின் பொழுது போக்கும் மையமாகவும் இருந்தது. ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறி விட்டது. கோயிலில் சுவாமியை சிறை வைத்து போன்று கோயில் பிரகாரம் மற்றும் மின்றி கோயிலை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளும் இரும்பு கம்பிகளால் தடுக்கப்பட்டுள்ளது.

கோயில் வளாகமும் முழுக்க வரிசைப்படுத்து இறென் என்ற பெயரில் கம்பி கூண்டுகள் கொண்டு வரப்பட்டு பக்தர்கள் அடைக்கப்படுகிறார்கள். ஒரு முறை உள்ளே நுழைந்தால் தரிசனம் முடிந்து, உண்ணாமுலையம்மன் சன்னதி அருகில் வெளியில் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுவாமியை மட்டுமே தரிசிக்க முடியும். மற்றபடி கோயில் பிரகாரங்களை சுற்றிவர முடியாது. இதனால், கோயில் வளாகத்தை கோயில் ஊழியர்களை தவிர யாராலும் சுற்றி பார்த்து அழகை ரசிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுதவிர உள்ளூர் மக்கள் கோயிலுக்குள் செல்லவே முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பவுர்ணமி நாளில் மக்கள் தங்களுடைய வீடுகளுக்கு வாகனங்களில் கூட செல்ல முடியாமல் நடந்தே செல்ல வேண்டும். காரணம் நகரம் முழுக்க தெருக்கள் தடுப்பு வைத்து அடைக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் எளிதாக சுற்றித்திரிந்து கோயில் வளாகம் இன்று உள்ளூர் மக்கள் உள்ளே நுழையவே முடியாத இடமாக மாறி விட்டது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். எங்களுக்கு சுதந்திரமாக, எளிதாக கோயிலுக்கு செல்லவும், வீடுகளை விட்டு வெளியில் வரவும் வழி வகை செய்ய வேண்டும் என்று அவர்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர்.

அது தான் கடந்த சட்டசபைத் தேர்தலில் எதிரொலித்து. உள்ளூர் மக்களுக்கு தரிசனத்துக்கு சிறப்பு ஏற்பாடு செய்து கொடுப்பேன் என்று போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வாக்குறுதி அளித்தனர். ஆனால், தேர்தல் முடிந்து பல மாதங்களாகி விட்டது. ஆனால், இதுவரை அந்த திட்டம் செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இது குறித்து கோயில் நிர்வாகத்திடம் கேட்டாலும் 'இப்போதைக்கு எதுவும் இல்லை. அரசு முறைப்படி அறிவிக்க வேண்டும். அதற்கான சாதக, பாதகங்களை வரையறை செய்ய வேண்டும். திட்டவரையறை வேண்டும். அதன் பிறகு தான் இது சாத்தியப்படும்' என்கின்றனர்.

இதனால், அருணாசலேசுவரரை எளிதாக தரிசிப்பது உள்ளூர் மக்களுக்கு எட்டாக்கனியாகவே மாறியிருக்கிறது.

காத்திருப்பு கூடம் கட்டப்படுமா? தரிசன முறையில் மாற்றம் வருமா?

சுவாமி தரிசனத்து ராஜ கோபுரம், அம்மணி அம்மன் கோபுரம் வழியாக கட்டணமும், பொது தரிசனத்துக்கு ராஜகோபுரம் வழியாகவும் கோயிலுக்கு உள்ளே பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தரிசனம் முடிந்து திருமஞ்சன கோபுரம் வழியாக வெளியே அனுப்பப்படுகின்றனர்.

கட்டண தரிசன வரிசையில் செல்லும் பக்தர்கள் அம்மணி அம்மன் கோபுரம் வழியாக உள்ளே செல்லும் போதும், தரிசனம் செய்து விட்டு திருமஞ்சன கோபுரம் வழியாக வெளியே வரும் போதும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. அதை முறைப்படுத்தும் பொருட்டு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் எதிரே விசாலமான பக்தர்கள் காத்திருப்பு கூடம் அமைக்க வேண்டும்.

அங்கிருந்து கட்டண தரிசனத்துக்கும், பொது தரிசனத்துக்கும் வழியை பிரித்து அனுப்பினால், ராஜகோபுரம் நுழைவு வழியாகவும், அம்மணி அம்மன் கோபுரம், திருமஞ்சன கோபுரம் வெளியேறும் வழியாகவும் மாற்றினால் நெரிசல் குறையும், தரிசனமும் எளிதாகும்.

அம்மணி அம்மன் கோபுர தெருவில் அமைக்கப்பட்டுள்ள காத்திருப்பு கூடத்தை பிரேக் தரிசனத்திற்கு வரும் வழியாக பயன்படுத்தலாம். அந்த வழியில் செல்பவர்களை பே கோபுரம் வழியாக வெளியே அனுப்பலாம்.

இதனால், கோயிலில் பக்தர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் மற்றும் சிரமங்களை தவிர்க்கலாம். ஆன்லைனில் பதிவு முறையை அமல்படுத்தினால் புரோக்கர்கள் தொல்லையும் அகலும். இதை செயல்படுத்த அறநிலையத்துறை முன்வரவேண்டும் என்று பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மணல் கடத்திய லாரி பறிமுதல்

■ வந்தவாசி, ஆக.2-

வந்தவாசி டிஎஸ்பி சதீஷ்குமார், வயலூர் கிராமத்தில் கோயில் திருவிழாவையொட்டி இரு கிராம மக்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்னை தொடர்பாக விசாரிக்க நேற்று முன்தினம் இரவு அங்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது தேசூர் மடம் நெடுஞ்சாலையில் சேத்துப்பட்டில் இருந்து தேசூர் நோக்கி மணல் ஏற்றி சென்ற லாரியை சந்தேகத்தின் பேரில் அவர் மடக்கி நிறுத்தினார். டிஎஸ்பியை கண்டதும் லாரி டிரைவர் தப்பி ஓட முயன்றார். போலீசார் அவரை மடக்கி பிடித்து விசாரித்தனர். விசாரணையில், அனுமதியின்றி விண்ணமங்கலம் ஆற்று பகுதியில் இருந்து தேசூர் கட்டுமான பணிக்காக மணல் ஏற்றி வந்தது தெரியவந்தது.

மேலும், லாரியை ஓட்டி வந்தவர் மடம் கிராமத்தை சேர்ந்த ரமேஷ் (46) என்பது உறுதியானது. இதையடுத்து டிஎஸ்பி தேசூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

அங்கு வந்த போலீசார், மணல் கடத்திய லாரியை பறிமுதல் செய்து ரமேஷை கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து சென்றனர். தொடர்ந்த இதுகுறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து, லாரியின் உரிமையாளரான மணிவண்ணனை தேடி வருகின்றனர்.

படவேடு ரேணுகாம்பாள் கோயிலில் ஆடி 3ம் வெள்ளி முன்னிட்டு உற்சவர் காமதேனு வாகனத்தில், சிவலிங்க ஆலிங்கன பூஜை அலங்காரத்தில் அருள்பாலித்தார்.

வட்டி பணம் கேட்டு கார் பறித்தவர் கைது

■ வந்தவாசி, ஆக.2-

வந்தவாசி அடுத்த எஸ்.மோட்டூர் கிராமத்தை சேர்ந்தவர் பாபு மனைவி ஜெயா (45). இவர், வந்தவாசி டவுன் கோட்டை பகுதியை சேர்ந்த கிருஷ்ணகுமார் (31) என்பவரிடம் வட்டிக்கு பணம் வாங்கியதாக கூறப்படுகிறது. அதில் ரூ.70 ஆயிரம் திருப்பி செலுத்த வேண்டியிருந்ததாக தெரிகிறது.

இந்நிலையில், கடந்த 28ம் தேதி எஸ்.மோட்டூர் சென்ற கிருஷ்ணகுமார், ஜெயாவிடம் பணத்தை கேட்டுள்ளார். அப்போது அங்கு இருந்த ஜெயாவின் மகன் ஜெயபிரகாஷ் (21), 'பணம் கிடைத்தவுடன் கொடுத்து விடுகிறோம் என்று கூறியதாக தெரிகிறது.

இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது, ஜெயப்பிரகாசுக்கு சொந்தமான காரை கிருஷ்ணகுமார் எடுத்து சென்றதுடன், கொலை மிரட்டலும் விடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து ஜெயபிரகாஷ் கொடுத்த புகாரின் பேரில் வந்தவாசி வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து கிருஷ்ணகுமாரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

பாக்ஸ் நியூஸ்

கொள்முதல் மையங்களில் குவிந்து கிடக்கும் நெல் மூட்டைகள்

பாதுகாப்பாக சேமிக்குமா மாவட்ட நிர்வாகம்?

■ கலசபாக்கம், ஆக.2-

தமிழக அரசு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், திருவண்ணாமலை மாவட்டத்தில் 69 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்களை இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் செயல்படுத்தி வருகிறது.

இந்த மையங்களில் கடந்த பத்து நாட்களுக்கு முன் வரை தினமும் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள் முதல் செய்யப்பட்டு வந்தன

இந்நிலையில் தற்போது கமிட்டிகளிலும் தனியார் வியாபாரிகளிடமும் நெல்லுக்கு அரசு தரும் ஆதார விலையை விட கூடுதலாக கிடைப்பதால் விவசாயிகள் தற்போது நேரடி நெல் கொள்முதல் மையங்களை தவிர்த்து கமிட்டிகளுக்கு தங்கள் நெல்களை எடுத்துச் செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த ஆறு மாதங்களாக நேரடி நெல் கொள்முதல் மையத்தில் கொள்முதல் செய்து வெட்ட வெளியில் அடுக்கி வைக்கப்பட்ட நெல் மூட்டைகள் குடோனுக்கோ அல்லது மில்களுக்கோ எடுத்துச் செல்லாமல் அப்படியே கிடப்பதால் அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதோடு தற்போது நிலவும் கடும் வெயில், திடீர் மழை, காற்று மற்றும் ஈரப்பதம் காரணமாக நெல்லின் தரம் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்துள்ளது. நெல் முளைப்பது, பூஞ்சை தாக்குதல், எடை குறைதல் போன்ற பிரச்னைகள் ஏற்பட்டால், அரசுக்கு பொருளாதார இழப்பும் கூடுதல் பராமரிப்பு செலவும் ஏற்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் நேரடி நெல் கொள்முதல் மையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை உடனடியாக கிடங்குகளுக்கு மாற்றி, பாதுகாப்பாக சேமிக்கவும், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை ஏற்படாத வகையில் போக்குவரத்து மற்றும் கேபிப்பு வசதிகளை மேம்படுத்தவும் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு வேதனையுடன் கூறினார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் நேரடி நெல் கொள்முதல் மையத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள், வெட்ட வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் நேரடி நெல் கொள்முதல் மைய அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த காலங்களில் இதுபோன்ற பிரச்னைகள் ஏதும் இல்லாமல், விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்தவுடன் லாரிகளில் உடனுக்குடன் எடுத்துச் சென்று வந்தனர் ஆனால் தற்போது ஆட்சி மாற்றத்தின் காரணமாகவோ என்னவோ நெல் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு, அதனை ஏற்றிச்செல்லும் லாரி உரிமையாளர் எங்களை அடிபோடு ஒழித்துக் கட்டிவிட்டார். கடந்த ஆறு மாத காலமாகவே சரியான முறையில் லாரிகளை அனுப்பாமலும் கொள்முதல் செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்ட நெல்களை உடனுக்குடன் எடுக்காமலும் காலம் தாழ்த்தி விட்டனர். இதுகுறித்து எங்கள் மேலதிகாரிகளுக்கு தகவல் சொல்லியும் விவசாயிகள் பல வேறு இடங்களில் போராட்டம் நடத்தியும் எந்த ஒரு பலனும் இல்லாமல் போய்விட்டது. இதன் காரணமாக தற்போது நேரடி நெல் கொள்முதல் மையங்களில் கொள் முதல் செய்து வைக்கப்பட்ட நெல்கள் கேட்பாரற்று கிடைக்கிறது மாவட்ட நிர்வாகம் உடனடியாக நெல் மூட்டைகளை எடுத்துச் செல்ல உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு வேதனையுடன் கூறினார்.

வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பு பணி: கலெக்டர் ஆய்வு

■ திருவண்ணாமலை, ஆக.2-

தமிழகம் முழுவதும் 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027' பணிகள் தொடங்கியுள்ளது. முதற் கட்டமாக கடந்த மாதம் 17ம் தேதி முதல் 31ம் தேதி வரை சுயகணக்கெடுப்பு பணி நடந்தது. தொடர்ந்து வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் நேற்று தொடங்கியது. இப்பணி வரும் 31ம் தேதி வரை நடக்கிறது.

திருவண்ணாமலை தாலுகாவுக்குட்பட்ட இளாம் கரியந்தல் பகுதியில் வீட்டுப்பட்டியல் கணக்கெடுப்புப்பணிகளை கலெக்டர் வந்தனா கார்க் துவக்கி வைத்து, பணிகளை ஆய்வு செய்தார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சிவகுப்பிரமணியன், ஆர்டிஓ செல்வம், தாசில்தார் மோகன்ராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதியவர் மாயம்: மனைவி புகார்

■ வெம்பாக்கம், ஆக.2-

வெம்பாக்கம் அருகே மாமண்டூர் கிராமத்தை சேர்ந்தவர் பத்மாவதி (48). இவரது கணவர் மணிவண்ணன்(65). இவர் மனநலம் பாதிக்கப் பட்டு அதற்கு மருந்து சாப்பிட்டு வந்துள்ளார். மேலும் இவர் அடிக்கடி வீட்டை விட்டு வெளியே சென்று சில தினங்கள் கழித்து மீண்டும் வீட்டிற்கு வருவார்.

இந்நிலையில் ஜூன் 22 ம் தேதி வீட்டில் இருந்து வெளியே சென்வதாக கூறிவிட்டு சென்றவர் நீண்ட நேரம் ஆகியும் வீட்டிற்கு வரவில்லை. தனது கணவனை உறவினர்கள் துணையுடன் பல் வேறு இடங்களில் தேடியும் கிடைக்க வில்லை.

இதனையடுத்து தூசி போலீஸ் ஸ்டேஷனில் பத்மாவதி புகார் அளித்தார். அதன் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார் காணாமல் போன முதியவரை தேடி வருகின்றனர்

விலங்குகள் தாகம் தணிக்க தண்ணீர் சப்ளை

திருவண்ணாமலையில் வனத்துறை ஏற்பாடு

■ திருவண்ணாமலை, ஆக.2-

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலுக்கு நாள் தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். கோயிலுக்கு பின்புறமுள்ள அண்ணாமலையை சிவனாக பாவித்து கிரிவலம் வந்து பக்தர்கள் வழிபடுகின்றனர். 14 கி.மீ. நீள முள்ள இந்த கிரிவல பாதையில் மலைக்குட்பட்ட பகுதிகள் அனைத்தும் வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இங்கு புள்ளி மான்கள், கவரி மான்கள் என்று பல வகையான நூற்றுக்கணக்கான மான்கள், குரங்குகள், பறவைகள் என்று பல விலங்குகள் வாழ்ந்து வருகிறது. மான்களும் இதர விலங்குகளும் வனத்து விட்டு வெளியில் வராத படி வனத்துறை சார்பில் மலையை சுற்றிலும் இரும்பு கம்பியிலான வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மலையில் பல இடங்களில் கனைகள் மற்றும் குளங்கள் உள்ளன. இயற்கையான இந்த நீர்நிலைகளில் எந்தேரமும் தண்ணீர் நிரம்பி காணப்படும். இந்நிலையில், இந்தாண்டு போதுமான அளவு மழை இல்லாததாலும், நீண்டு கொண்டிருக்கும் கோடைவெயில் காரணமாக நகரில் உள்ள நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு வருகிறது. நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்து வருவதால் பல இடங்களில் வாகனங்களில் தண்ணீர் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் வனத்தில் வாழும் விலங்குகளின் தாகம் தணிய தண்ணீர் இருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும், கிரிவலப் பாதையில் பல இடங்களில் வேலி ஓரமாக மான்கள் கூட்டம், கூட்டமாக நின்று கொண்டிருக்கிறது. இதனால், வனத்துக்குள் போதுமான அளவுக்கு உணவு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக வனத்துறை அதிகாரிகளிடம் விசாரித்த போது, அண்ணாமலை வனப்பகுதியில் உள்ள விலங்குகளுக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்கிறது. இது தவிர வனத்துறை சார்பில் 9 இடங்களில் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு எப்போதும் தண்ணீர் இருக்கும். அதை கண்காணித்து வருகிறோம்.

தண்ணீர் இல்லாத நேரத்தில் டிராக்டர்கள் மூலமாக தண்ணீரை நிரப்பி வருகிறோம். அதனால், விலங்குகளுக்கு எந்தவித்தடுமும் தண்ணீர் இல்லை என்ற நிலை இல்லை. மாறாக கிரிவலப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலி ஓரமாக பலர் மான், குரங்கு போன்ற விலங்குகளுக்கு பழம், தண்ணீர் போன்ற வற்றை பக்தர்கள் கொடுத்து பழக்கி விட்டனர். அதனால் காரணமாகவே மான்கள் வேலி ஓரமாக கூடுகிறது.

மேலும், கம்பி வேலிகள் பல இடங்களில் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றை விரைவில் சீரமைக்க இருக்கிறோம். முழுமையாக வேலி அமைக்க அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறோம். பணிகள் விரைவில் தொடங்கும்' என்றனர்.

தினமலர் நாளைய சிறப்பு பக்கத்தில்..
நிதி மலர்

இபிஎப் கணக்கில் கோரப்படாத ரூ.9,330 கோடி
யுபிஐ பரிவர்த்தனைக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் வருமா?
சூழியல் மலர்

எண்ணிக்கையில் குறையும் வெள்ளை ஒட்டகங்கள்
135 டு 149
காப்பகங்களில் அதிகரித்த புலிகள்

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
சன்னதி தெரு திருவண்ணாமலை கிளை
ரெ.எண்.47, சன்னதி தெரு, திருவண்ணாமலை - 606601.
போன்: 04175-253344. Email: vjthti@bankofbaroda.bank.in
(bankNet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்தான செய்திதரள்களில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை IV-யின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுக் சொத்துக்கள் அமலாக்கக்கட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு அறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வைரிஃபை செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிறுவனத்த் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேப்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், பேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
1. திரு. V.முத்துசெல்வம், த/பெ. வெங்கட்டராமன், தெ.129, அம்மன் கோயில் தெரு, கீழ்வணக்கம்பாடி கிராமம், தண்ராம்பேட் தாலுக்கா, திருவண்ணாமலை - 606707. 2. திரு. V.முரளி, த/பெ. வெங்கட்டராமன், தெ.129, அம்மன் கோயில் தெரு, கீழ்வணக்கம்பாடி கிராமம், தண்ராம்பேட் தாலுக்கா, திருவண்ணாமலை - 606707. 3. திரு. V.சேட்டு, த/பெ. வெங்கட்டராமன், தெ.129, அம்மன் கோயில் தெரு, கீழ்வணக்கம்பாடி கிராமம், தண்ராம்பேட் தாலுக்கா, திருவண்ணாமலை - 606707.
Loan A/c.No.69690600001324, நிலுவை தொகை ரூ.8,32,927.46/- மேலும் 29.07.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
31.07.2026 அன்று மாத்து நிலுவை தொகை ரூ.8,32,927.46/-
அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின்
திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பதிவு மாவட்டம், தண்ராம்பேட் சார் மாவட்டம், தண்ராம்பேட் தாலுக்கா, கீழ்வணக்கம்பாடி கிராமத்தில் சர்வே எரு. 245/14C (புதிய சர்வே எரு.245/14C3 0.0.85), அளவு கிழக்கில் இருந்து மேற்காக 21 அடி. வடக்கில் இருந்து தெற்காக 55 அடி, ஆக மொத்தம் 1155 சதுர அடி அல்லது 107.30 சதுர மீட்டர். செட்டில் மென்ட் 241 ½ = 913 ½ சதுரஅடி. இந்த சொத்தானது திரு.V.முத்துசெல்வம் பெயரில் உள்ளது. நான்கு எல்லை: கிழக்கில் திரு. விஜையனின் மனை, மேற்கில் செல்வி வள்ளியம்மாள் மனை, தெற்கில் பெருமாளின் மனை, வடக்கில் 15 அடி வீதி. வசாதிகள் நிலை: ஆக்கப்பூர்வமான
நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 8,50,000/- பேவணித் தொகை ரூ. 85,000/- ஏல உயர்வு தொகை ரூ. 10,000/-
மின் ஏல தேதி மற்றும் நேரம் 14.09.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
சொத்தினை பார்வையிடும் தேதி : 12.08.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
பேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 14.09.2026
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction.htm மற்றும் BAANKNET.COM என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏதேதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 04175-253344,செல்: 9515024578 & 9952243067 தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 01.08.2026
இடம் : திருவண்ணாமலை
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா